RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1979

# குருலிங்க சங்கம வழிபாடு

ஆ. பிரின்சி பெல்ஷீட்டா [அ, *], சு. இரவிச்சந்திரன் [அ]

[அ] சர் ஏ.டி.பன்னீர்செல்வம் தமிழ்த்துறை உயராய்வு மையயம், அரசர் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது), திருவையாறு-613204, தமிழ்நாடு, இந்தியா

# Gurulinga Sangama Worship

A. Prince Felcita [a, *], S. Ravichandran [a]

[a] Sir A.T. Panneerselvam Tamil Research Centre, Rajah's College, (Affiliated to Bharathidasan University), Thiruvaiyaru-613204, Tamil Nadu, India

* Corresponding Author: princefelcita@gmail.com

Received: 12-08-2022
Revised: 05-10-2022
Accepted: 21-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT


Saiva metaphysics, guru worship, Linga worship, confluence worship, and the goal of the soul is to attain godliness. Thirumanthiram, the eighth sutra of Sivagnanabodha refers to the Saarala (Single Point) system. The perfection of the soul, the word Guru is also referred to as the remover of darkness. God will appear as a Guru. Arrogance, karma, and illusion lead to birth. It is God who prevents them. The word Shiva means purity. It is God who purifies the three unclean things. According to perfection in the souls, he will manifest himself as form, incorporeity, and corporeal. Devoted service, godly deeds, meditation, and knowledge are the paths to reaching God. The highest point of spirituality is knowledge. Gurulinga Sangama worship is the simplest way to attain enlightenment. The clergy regarded God as their guru. Gurulinga Sangama worship is a simple means for the soul to be liberated. The Lord himself has come as the Guru of Manickavasagar. He gave knowledge to the Apparadi through his sister. Guru worship is the first way for the soul to reach the end. Guru worship removes the misery of births. Linga worship is the worship of the embodied form of Linga (Here, Linga that is visible to the eyes is invisible to the mind). Confluence worship is the practice of performing worship together with the devotees. Confluence worship is the simplest way to receive god's grace. The confluence worship is explained in the 12 sutras of Thirugnanabodhar. Gurulinga Sangama worship is a state of interconnection with the Lord. When arrogance reduces, the strength of Karma and illusion also diminish. This is the basis of Gurulinga Sangama worship.

**Keywords:** Guru Worship, Sangam Worship, Eleventh Cycle, Linga Worship, Three Types of Souls, Wisdom, Servant Worship.

## முன்னுரை

தமிழர்களின் செறிந்த அறிவைப் புலப்படுத்துவதில் தனியிடம் பெறுவது சைவ சித்தாந்தம். உலகப் பொருள்களைப் பதி, பசு, பாசம் என்ற மூன்றாகக் கண்டது. சைவ சித்தாந்தம், பதி இறைவனையும், பசு ஆன்மாவையும் பாசம் உலகையும் குறிப்பனவாகும்.

ஆன்மா கடைத்தேர குருலிங்க சங்கம வழிபாடு மிக அவசியம் என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும். குருலிங்க சங்கம வழிபாட்டின் நுட்பத்தைப் பதிோனராம் திருமுறையின் வாயிலாகக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம். திருமுறைகளின் பிழிவே சைவ சித்தாந்தம் என்ற நுட்பத்தை உணர்தல் அவசியம். ஆன்மா மெய்ப்பொருளை அடைவதற்குரிய சைவ நெறி முறைகளில் குருலிங்க சங்கம வழிபாடு குறிப்பிடத்தக்கது.




எனப் பகுப்பர்.

## குருவழிபாடு

ஞானத்தை அடைதல் ஆன்மாவின் குறிக்கோள். ஒரு துணையை நாடுதல் அவசியமாகிறது. ஆன்மா பக்குவமான சாதனமாக ஆனதற்குப் பிறகு, ஞானமடைய சாதனம் அமைகின்றது. ஞானம் பிறவியை ஒழித்து விடும். அதற்கு மேலான நிலை வேறில்லை என்பதைத் திருமூலநாயனார்,

"ஞானத்தின் மிக்கநெறி நாட்டில்லை

ஞானத்தின் மிக்கசமயம் நன்றன்று

ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்

ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே"

என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது (Thirumoolar, 1965).

சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரம் குருவின் சிறப்பை உணர்த்துகின்றது. அறிவுக்குள் அறிவாய் இறைவன், ஆன்மாவின் பக்குவ முதிர்ச்சியால் குருவாக வந்து ஞானத்தைக் கற்பிப்பான்.

தாயுமானவர் பாடல்களும் குரு வணக்கத்தை முன்வைத்தே தொடங்குதல், குரு வழிபாடு போன்றவற்றைக் கூறுவதாக அமையப் பெற்றுள்ளது. சித்தாந்த மதத்தில் சொல்லப்படுகின்ற மோட்சமளிக்கும் தலைவனே சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே ஞானமயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே, சங்கரனே! சுயம்புவாயிருப்பவனே சம்புவாயிருப்பவனே சம்புவாயிருப்பவனே என குருவின் சிறப்பை கீழ்க்காணும் தாயுமானவரின் பாடல் விளக்குகின்றது.

"அங்கைகொரடு மலர்தூவி அங்கமது புளகிப்ப

அன்பினா லுருகி விழிநீர்

ஆறாக வாராத முத்தியின் தாவேச

ஆசைக் கடற்குள் மூழ்கிச்

சங்கர சுயம்புவே சம்புவே எனவுமொழி"

மன்னனாக இறைவனும், இளவரசனாக ஆன்மாவும் அமைந்துள்ள தன்மையை மெய்கண்டார் குறித்துள்ளது சிந்திக்கத்தக்கது (Vadivelu Mudaliyar, 2014).

ஒவ்வொரு பிறவியிலும் செய்கின்ற நல்வினையால் ஆன்மா படிப்படியாகப் பக்குவம் பெற்று ஒருபிறவியில் பக்குவம் முதிர்ந்து ஞானத்தைப் பெறும். ஞானம் முத்தி வீட்டைக் கொடுக்கும் வாயில், தவம் ஞானத்தை அடைவதற்குரிய வாயில், தவம் ஞானத்தை அடைவதற்குரிய வாயில். தவத்தின் முதிர்வால் இறைவன் குருவாகத் தோன்றிவந்து, ஆன்மாவிற்கு ஞானம் தந்து தன் பாதத்தில் இணைத்துக் கொள்கின்றான்.

"குரு என்ற சொல்லிற்கு அறியாமை நீக்குபவர் என்று பொருள். அறிவும், ஆற்றலும் பொருந்திய ஆசானை அடைதல் இறைவன் திருவருளால் நடப்பதாகும். இறைவன் திருவருள் குருவாக தோன்றுகின்றது" (Muthuraman, 1975).


"அகத்துறு நோய்க்கு உள்ளினர் அதனைச்

சூத்தவரும் காண்பரோ தான்"

என்ற உமாபதி சிவாசாரியாரின் கருத்துச் சிந்திக்கத்தக்கது (Umapathi Sivachariyar, 1968).

ஆன்மாவிற்குப் பாசம் (ஆணவம், கன்மம், மாயை) நோயாகும். அவற்றை நீக்கி ஆன்மாவைக் காப்பாற்றுவது குருவாகி வந்த இறையின் செயற்பாடு எனில் பொருத்தமாகும் (Muthuraman, 1975).

முதற்குருவாகிய இறைவனை "சிவம்" என்ற சொல்லால் சைவ சித்தாந்திகள் குறிப்பிட்டது சிந்திக்கத்தக்கது.



(க. வச்சிரவேல் முதலியார், பா.120)

குருமரபினை கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. என்ற வரைகோடு உணர்த்த முற்பட்டுள்ளது.

ஆன்மாக்களுக்கு எவ்வெவ்வகையில் குருவாக வருவான் இறைவன் என்பதை,

"மெய்ஞானம் தானே விளையும் விஞ்ஞான கலர்க்கு

அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் - மெய்ஞானம்

பின்னுணர்த்தும் அன்றிப் பிரளாய கலருக்கு

முன்னுணர்த்தும் தான்குருவாய் முன்"

என்ற சிவஞான போத எட்டாம் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரண முதல் எடுத்துக்காட்டு வெண்பா உணர்த்துகின்றது (Muthuraman, 1975).

ஒரு மலம் உடைய உயிர்கள் என்பன ஆணவம் ஒன்றையே உடையனவாகும். ஒரு மலம் உடையவர் விஞ்ஞானகலர் என்று வழங்கப் பெறுவர். ஆணவத்தை அடுத்து நிற்பது கன்மம். அதனால் இருமலம் உடைய உயிர்கள் ஆணவம், கன்மம் என்னும் இரண்டையும் உடையனவாகும். இருமலம் உடையவர் பிரளயாகலர் என்று பேசப்பெறுவர். மூன்றாவது மலம் மாயை மூன்று மலங்களை உடைய உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் உடையன. மும்மலத்தையும் உடையவர் சகலர் என்ற பெயரைப் பெறுவர்.

விஞ்ஞானகலர் எனப்படும் ஒருமலம் உடையார்க்கு இறைவன் உள்நின்று மெய்ஞானத்தை உணர்த்துவான். பிரளாயாகலர் எனப்படும் இருமலமுடையவர்க்கு இறைவன் உள்நின்று உணர்த்தாது அவர்கள் கண்முன் தோன்றி ஞானத்தை உணர்த்துவான். அஞ்ஞானசகலர்க்கு, அவர்கள் தவம் செய்து பக்குவம் பெற்றபிறகு, சுத்தான்ம சைதன்னியத்தைத் தனது வடிவகைக் கொண்டு குருவாக வருவான் என்பது (உதாரண வெண்பாவின்) விளக்கமாகும்.

வாழ்க்கையில் நாம் வணங்கிப் போற்ற வேண்டிய தெய்வங்கள் நான்கு, அவற்றில் முதலாவது தாய், இரண்டாவது தந்தை மூன்றாவது குரு, நான்காவது இறைவன். இறைவனை நான்காவதாக வைத்துள்ள கருத்து நினைக்கத்தக்கது. இறைவனைப் பற்றி அறிந்து கொள்வதற்குத் தகுதியும், ஞானமும், தேவை என்பதை அம்முறை வைப்பு நமக்குத் தெரிவிக்கின்றது.

இறைவன் குருலிங்க சங்கமங்களில் தயிரின் நெய்போல் பிரகாசமாயும், ஏனைய இடங்களில் பாலின் நெய்போலும், அப்பிரகாசமாயும் நிற்பவன் என்னும் சைவக் கருத்து நினைக்கத்தக்கது (Muthuraman, 1975).

இறையருளால் குருவெனத் தகுதி பெற்றோர் பசு, பாச அறிவு நிலைகளைக் கடந்து பதிஞானம் பெற்றவராவர். அவர்களுடைய உள்ளங்களில் இறை ஒளி பிரகாசிக்கும். அவர்களுடைய மனம், புத்தி ஆகிய அந்தக் கரணங்கள் யாவும் சிவகரணங்களாகச் செயல்படுகின்றன.

அத்தகைய சக்தி பெற்ற பெரியோர்களில் சமயக்குரவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். திருஞானசம்பந்தர் அப்பரடிகள் போன்றோரின் திருவிளையாடல்களைப் பதினோராம் திருமுறை அருளாளர்களில் ஒருவரான நம்பியாண்டார் நம்பி குறித்திருப்பது குறிப்பிடத்தக்கது (Muthuraman, 1975).

## பதினோராம் திருமுறை உணர்த்தும் குரு வழிபாடு

"அரும்பின அன்பில்லை அர்ச்சனை இல்லை அரன்நெறியே,

விரும்பின மாந்தர்க்கு மெய்ப்பணி செய்கிலம் பொய்க்களமைந்த

விரும்பின உள்ளத்து னேறகெங்ங னேவந்து நேர்பட்டதால்

கரும்பின நீள்வயல் சூழ்காழி நாதன் கழலடியே"

"பெறுவது நிச்சயம் அஞ்சல்நெஞ் சேபிரமாபுரத்து

மறுவறு பொற்கழல் ஞானசம் பந்தனை வாழ்த்துதலால்"

என்ற நம்பியாண்டார் நம்பியின் அருட்பாடல்கள் குருவழிபாட்டின் தன்மையினை வெளிப்படுத்துகின்றன (Nambiyandar Nambi, 1955).

இறையருள் பெற்ற குருவை வழிபடுவதால் அரன்கழல் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பியாண்டாரின் சிந்தனை சைவ உண்மைக்கு முன்னோடியாகும்.

"எண்வகை மூர்த்தி என்பதில் வுலகினில்

உண்மை யானைஎன உணர்த்திய வாறே"

என்ற பட்டினத்துப்பிள்ளையின் கருத்து. இறைவன் மனத்துள் குருவாக நின்று, ஞானத்தை உணர்த்திய தன்மையை வெளிப்படுத்துகின்றது (Nambiyandar Nambi, 1965).

தாயுமானவரின் பாடல்களிலும் குரு மரபின் வணக்கம் குறித்துப் பல பாடல்களைப் புனைந்துள்ளார். பாடல் 1094 முதல் 1106 வரை குருவின் அருளைப் பெறவும், தீருவடிகளைத் துதிக்கவும், வணங்கவுமாக பாடல்கள் சுட்டிக் காட்டப்படுகிறது. ஆன்மாக்கள் கொள்ளும் குழப்பத்தை நீக்கவே இறைவன் குருவாகத் தோன்றுகின்றான். தக்க ஆசான் இல்லாமல் வித்தை கற்கவியலாது.

ஆன்மீக வித்தையைக் கற்றுத் தருவதற்குத் தகுதியான ஆன்மாவை நோக்கி இறைவன் குருவாகி வருகின்றான். அந்நிலையில் வருபவரை வழிபட்டு முத்தியடைவது எளிய காரியமாகும். ஆன்மா பிறவிச் சுழியிலிருந்து விடுபட மூன்று வழிபாடுகளை அமைத்த (குரு - லிங்க - சங்கம்) சான்றோர்களின் திறம் நினைக்கத்தக்கது.

மாணிக்கவாசகருக்கு, ஆலமரத்தடியின் கீழ் அமர்ந்து மோன நிலையில் ஞானம் உணர்த்திய திறத்தை அவரது வரலாறு உணர்த்துகின்றது. அப்பரடிகளுக்கு அவரது தமக்கையார் திலகவதியார் குருவாக அமைந்த திறம் நினைக்கத்தக்கது. ஆன்மா கடைத்தேறும் செயலின்முதல் நிலை குருவை வழிபடுதலாகும். இறைவனின் கருணையின் வெளிப்பாடு அவன் உருவெடுத்து அருள்கொடுக்கும் நிலையை உணர்த்துகின்றது.

இறைவன் ஆன்மாவின் பொருட்டுக் குருவாக வரும் தன்மையை மெய்கண்டார். "தம் முதல் குருவுமாய்" என்ற தொடரால் எட்டாம் சூத்திரத்துள் அமைந்துள்ளது நினைக்கத்தக்கது. நம்பியாண்டார் நம்பிகள்,

"குருவாகக் கொடுசிவன் அடிசூடத் திரிபவர்

குறுகார்புக் கிடர்படு குடர்யோனிக் குழியிலே"

என்ற பாடல் வரிகளால் குருவழிபாட்டின் பயனைச் சித்தரித்துள்ளார் (Nambiyandar Nambi, 1965).

## சிவலிங்க வழிபாடு

அருட்சக்திக்கோர் எல்லை இல்லை. இறைவனைப் பல்வேறு வடிவங்களாக அமைத்ததற்கு அருள் மயம் காரணமாகும். இறைத்திருவுருவங்கள் அனைத்தும், உயிர்களின் நன்மைக்காக அமைந்தனவாகும். அவ்வுருவங்கள் சிவதத்துவங்களால் உண்டானவை.

காட்சியின் இயல்பு கண்கள் மனத்திற்குச் செல்லும் வாயில்களாகும். கண்கள் பார்க்க அக்காட்சியின் தாக்கம் மனத்தில் இடம்பெறும். ஆன்மா பக்குவம் பெற மனம் சொல்வதைக் கண்கள் பார்க்கத் தொடங்கும். நம் முன்னோர்கள் இறைவனின் வடிவங்களைப் பார்வையின் பக்குவத்திற்காகப் பின்வருமாறு அமைந்துள்ளனர்.

சிவம் → சக்தி → நாதம் → விந்து → சதாசிவம் → மகேசுவரன் → உருத்திரன் → பிரமன் → விட்டுணு (Muthuraman, 1975). ஆகிய ஒன்பது மூர்த்தங்களில் முதல் நான்கு அருவமாகும். இறுதி நான்கு உருவமாகும். சதாசிவம் என்பது உருவமாகவும், அருவமாகவும் விளங்குவது. இலிங்கம் அதற்குக் காட்டாகும். இலிங்க வழிபாடு மிகவும் பழமையானது. அம்முறை உலகத்தின் பல பாகங்களிலும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. உண்மைப் பொருளை உணர்த்தும் தத்துவ அறிகுறியாகக் (Philosophic Symbolism) கருதுதல் நலம் (Muthuraman, 1975).

இலிங்க மூர்த்தத்திற்குச் "சாதாக்கியம்" என்ற பெயர் உண்டு. அவற்றிலிருந்து பல மூர்த்தங்கள் தோன்றின. விநாயகர், முருகன், பைரவர், வீரபத்திரர் முதலியனவற்றைக் கூறுதல் சிறப்புடையது. பதினோராம் திருமுறையுள், குறிப்பாக இலிங்க வழிபாடும், முருக வழிபாடும், விநாயகர் வழிபாடும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

ஆன்ம பக்குவ உணர்ச்சியினால் ஆன்மா, குருவை நாடி, அவரது எண்ணப்படி அருளுணர்ந்து, ஆன்மீகத்தின் பலம் உணர்ந்து வழிபாடு புரியும், குருவழிபாட்டிற்குப் பிறகு இலிங்க வழிபாட்டை முன்னோர்கள் அமைத்துள்ள திறம் நினைக்கத்தக்கது (Muthuraman, 1975).

இலிங்க வழிபாட்டைச் சிறப்பாகக் குறிக்கும் வண்ணம் காரைக்காலம்மையின் பாடற் தொகுப்புக்களுக்குப் பின் இரண்டாவதாக ஐயடிகள் காடவர்கோன் நாயனாரின் சேத்திர வெண்பா இத்திருமுறையில் அமைந்துள்ளது.

"ஐயாறு வாயால் அழை

அவிழ்கழகம், பூஞ்சோலை, ஆரூரற் காளாய்க்

கவிழ்கமுகம் கூம்புகளன் கை" (Nakkirar, 1965)

என்ற ஐயடிகள் காடவர்கோன் வாக்கும்,

"நின்னுரை யதனோடும் எழிற்சிவ லிங்கந்

தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்" (Nakkirar, 1955)

என்ற நக்கீரதேவ நாயனாரின் வாக்கும்,

"வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை

ஆளுடையான் செம்பொன் னடி"

என்ற பட்டினத்துப் பிள்ளையின் வாக்கும், இலிங்க வழிபாட்டினை உணர்த்துவது நினைக்கத்தக்கது (Umapathi Sivachariyar, 1968). இலிங்க வழிபாட்டினை "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்ற சிவஞான போத பன்னிரெண்டாம் சூத்திரம் உணர்த்துவது குறிப்பிடத்தக்கது.

## சங்கம வழிபாடு

சிவஞான போதத்தின் பனிரெண்டாம் சூத்திரத்தில் "அன்பரொடு மரிஇ மாலற நேயம் மலிந்தவர் வேடமும்" என்ற தொடரால் சங்கம வழிபாட்டின் சிறப்பை மெய்கண்டார் கூறியுள்ளது சிந்திக்கத்தக்கது. சங்கமம் என்ற சொல்லிற்கு இணைதல் என்பது பொருள். ஆன்மாவும் ஆண்டவனும் இணைதற்கு அடியவர்கள் பாலமாக அமைந்துள்ளனர்.

புலன் சேட்டைக்குட்பட்ட ஆன்மாவைக் குருலிங்க சங்கம வழிபாட்டின் மூலம் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை நம் முன்னோர்கள் கண்டறிந்தனர். இறைவனை அடைவதற்குரிய வழி அவனது அடியாரை வழிபடுதலாகும்.

"தொடை கொண்ட வார்சடை அம்பலத்தான்

தொண்டர்க் கேவல் செய்து

கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு

வாழ்தல் களிப்புடைத்தே"

என்ற பட்டினத்துப் பிள்ளையின் எண்ண வெளிப்பாடு நயம்மிக்கதாகும் (Nambiyandar Nambi, 1965).

மாலையணிந்த நீண்ட சடையுடைய சிவபெருமானுக்குத் தொண்டரான அடியவர்க்கு ஏவல் செய்து, பிச்சை கொண்டு வாழ்தலைச் சிறப்புடைய மகிழ்வுடைய நிகழ்வாக, பட்டினத்துப்பிள்ளை கருதுவது நினைக்கத்தக்கது. சங்கம வழிபாடு அடியவரைக் கண்டு வழிபாடல், அடியார்களோடு வழிபடல் என்ற இரு நிலைகளைக் கொண்டது.

## அடியவரை வழிபடல்

"திருவேட் டுவந்தந் திருவடி கைத்தொழக் கெடுமே" (Nambiyandar Nambi, 1965)

என்ற கல்லாட தேவநாயனாரின் வாக்கும்,

"நின்னை அடைந்த அடியார், அடியார்"

என்ற பட்டினத்துப்பிள்ளையின் வாக்கும், அடியவர்களைத் தனித்து வழிபடும் தன்மையைப் புலப்படுத்துகின்றன (Pattinathu Pillaiyar, 1955).

## அடியவர்களோடு வழிபாடு புரிதல்

"சிரை தைஇய உடுக்கையர் சீரொடு

கற்றோர் அறியா அறிவினர்"

என்ற நக்கீரதேவநாயனாரின் வாக்கு அடியவர்கள் கூட்டமாகச் சென்று வழிபட்டு இறையருள் பெறும் தன்மையை உணர்த்துகின்றது (Pattinathu Pillaiyar, 1955).

சங்கம வழிபாடு ஆன்மீக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது. மெய்த் தொண்டர்களின் கூட்டத்தோடு இறையை அடையச் செல்லும் வழி எளியது இனியது.

"மெய்த் தொண்டர் செல்லும் நெறியறியேன்"

என்று ஏங்கும் பட்டினத்துப்பிள்ளையின் வாக்கு, தொண்டர் நெறியின் முக்கியத்தைக் கூறுகின்றது (Pattinathu Pillaiyar, 1965).

குரு, லிங்க, சங்கம வழிபாடுகள் இறைவனிடத்து ஆன்மாவை இரண்டறக் கலக்க வைக்கும் சாதனங்களாகும். மனித உடலுக்குள் இறைவன் வாழும் நம்பிக்கை சமய உணர்வாகும். தன்னைப் போல மனித உருவில் இருக்கும் ஓர் அடியவரைப் பணிந்து தொழும் போது ஆணவ முனைப்புக் குறையத் தொடங்கி விடுகின்றது. ஆணவத்தின் வலிவு குறையத் தொடங்கினால் மற்ற இருமலங்களான கன்மமும், மாயையும் தானே வீழும் நிலை எய்திவிடும்.

## முடிவுரை

குருலிங்க சங்கம வழிபாடு ஆன்மா பக்குவம் பெறுவதற்கு வழிவகுக்கும். ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்ப இறைவன் குருவாக வருவான். மூவகை ஆன்மாக்களுக்கு ஏற்ப இறையருள் கிட்டும். குருவழிபாடு இறையருள் பெறும் எளியவழி. காட்டுக்கு வலிமை உண்டு என்பதால், இலிங்க வழிபாடு தோன்றியது. புலன் சேட்டைக்கு ஆட்படும் ஆன்மா குருலிங்க சங்கம வழிபாட்டால் தெளிவுபெறும். சங்கம வழிபாடு அடியவரின் வழிபாடாகும். சங்கம வழிபாடு இறையருளை எளிதில் பெறமுடியும். குருலிங்க சங்கம வழிபாடுகள் இறைவினடத்து ஆன்மாவை இரண்டறக் கலக்கும் சாதனமாகும்.

## References


Muthuraman, R. (1975) Saiva Siddhantham, Tamil Nadu Paada Nool Niruvanam, Chennai, India.

Nakkirar, (1955) Thirumaram, Thiruvavaduthurai Adheenam, India.

Nakkirar, (1965) Thirukannappa Devar Thirumaram, Thiruvavaduthurai Adheenam, India.

Nambiyandar Nambi, (1955) Aaludaya Pillai Thiruvanthathi, Thiruvavaduthurai Adheenam, India.

Nambiyandar Nambi, (1965) Thiruvegadasa Malai, Thiruvavaduthurai Adheenam, India.

Pattinathu Pillaiyar, (1955) Thiruvidaimaruthoor Mummanikovai, Thiruvavaduthurai Adheenam, India.

Pattinathu Pillaiyar, (1965) Koyil Nanmanimaalai, Thiruvavaduthurai Adheenam, India.

Thirumoolar, (1965) Thirumanthiram, Tiruvavaduthurai Adheenam, India.

Umapathi Sivachariyar, (1968) Thiruvarutpayan, Thiruvavaduthurai Adheenam, India.

Vadivelu Mudaliyar, (2014) Thayumanavar Swami Padalkal Moolamum Uraiyum, Saratha Pathippagam, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License